**2.**

எம் ஜன்மபூமி தாயே!
எம் கர்மபூமி நீயே
எம் புண்யபூமி தாயே!
குலதெய்வமென்றும் நீயே
வாழ்வாம் மலர்தனை உன்
திருவடிதனில் படைத்தோம்
ஏழேழு பிறவிதோறும்
உனையே வணங்கி வாழ்வோம்
உனதேவல் செய்துயர்வோம் (எம் ஜன்மபூமி)
உணவாகி நீருமாகி
உடலத்துடன் கலந்தாய்
ஊனாகி உதிரமாகி
எம்மில் நிறைந்து நின்றாய்
உனக்காகவே எம் வாழ்வு
உனக்காகச் சாவுமேற்போம்
உனக்காகத் தொண்டுசெய்தே
வளமோங்கும் நிலை சமைப்போம் (உனதேவல்)
ஒப்பற்ற இமயமுந்தன்
ஒளிவீசும் மகுடமாகும்
முப்புறமும் சூழும் கடல்கள்
ஓயாது மணிகள் தூவும்
இணையற்ற நாடெம் நாடு
என்றே முழக்கம் செய்வோம்
கணமேனும் உனை மறந்தே
உயிர் வாழச் சகியமாட்டோம் (உனதேவல்)
நீ காத்த நெறிமுறைகள்
காலத்தை வென்ற அமுதம்
நீ உறையும் ஆலயங்கள்
தர்மத்தின் மையமாகும்

பண்பின் பதாகை யேந்தி
புவியெங்கும் விஜயம் செய்வோம்
பண்பாட்டின் தென்றலாகி
உள்ளங்கள் குளிரவைப்போம் (உணதேவல்)

தாய்ப்பாச மோங்க வைப்போம்
தனயர்களிணைய வைப்போம்
தாய்நாடு யர்த்தும் உணர்வை
நெஞ்சங்கள் தோறும் வளர்ப்போம்
கைம்மாறு கருதிடாமல்
கடமைகளாற்ற வந்தோம்
கணமேனும் துஞ்சிடாமல்
பயணம் தொடர்ந்து செல்வோம் (உணதேவல்)

3.

## 54.

எத்தனை ஜன்மம் எடுத்தாலும் பாரத
மண்ணிலேயே தோன்ற வேண்டுவனே - ஹிந்து
பூமியிலே தோன்ற வேண்டுவனே (எத்தனை

சத்திய ஆர்வமும் நித்திய சேவையும்
சாகச வாழ்க்கையும் வேண்டுவனே
பித்தனாய் மாறியே தொண்டுகள் செய்திடும்
பெருமைகொள் வாழ்க்கையை வேண்டுவனே (எத்தனை

ஏழை எளியவர் எங்கள் நன்னாட்டிலே
என்றும் பசியாற வேண்டுவனே
கோழைகளில்லாமல் வீரத்தொழில் செய்யும்
கூட்டம் தொடர்ந்திட வேண்டுவனே (எத்தனை

தேசம் அழைத்திடின் பாசம் களைந்திடும்
தெய்வீக நல்லருள் வேண்டுவனே
நீசத்தனம் நீங்கி நீதி துலங்கிட
நித்தம் தொண்டாற்றிட வேண்டுவனே (எத்தனை

எண்பது கோடிக்கும் நன்மைகள் செய்வதே
உண்மையில் முக்தியென்றோதுவனே
இப்பணி செய்வதில் எத்தகைத் துன்பமும்
ஏற்றிடுவேனிது சத்தியமே

(எத்தனை